சொல்லியிருக்கிறேன். இதற்கு இன்னும் விளக்கமாக பதில் சொல்ல முடியும். ஒவ்வொரு திட்டத்திற்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வளவு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதற்கெல்லாம் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட முறையில் கேள்வி ஒன்றும் கேட்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்த அளவிற்கு சாதனைகளைச் சொல்கிறோம். நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது செய்யவில்லையென்று நீங்களே சொல்கிறீர்கள். நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள், நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்றுதான் நான் சொல்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த சாதனைகளை நாங்கள் சொல்கிறோம். இப்போது ஒவ்வொரு திட்டமாக எடுத்துக்கொண்டால், நாங்கள் செய்ததை சொல்லித்தான் ஆக வேண்டும். குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், நீங்கள் செய்ததைவிட மூன்று மடங்கு அதிகமாகச் செய்திருக்கிறோம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எது கேட்டாலும் நாங்கள் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான் விட்டுவிடுங்கள்.

வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

215—

மகளிர் கலைக் கல்லூரி

***4050—திரு. சு. ராஜேந்திரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, அரியலூரில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS

2018 ஜூன் 26]

(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, அரியலூரில் மகளிர் கலைக் கல்லூரி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் இதயங்களில் தெய்வமாக வீற்றிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்.

அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் புதியதாக சுற்றுச்சூழல், அறிவியல் இளங்கலை பாடப் பிரிவுகளை உருவாக்கித் தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வழிநடத்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். அரியலூர் தொகுதியில் ஏழையெளியோர் மற்றும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிகம் நிறைந்துள்ளனர். மேல்நிலைப் பள்ளிப் படிப்பினை முடித்த எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அதிக சிரமம் இல்லாதவகையில் சிறந்த கல்வியினைப் பெற்றிட அரியலூர் நகரில் ஒரு மகளிர் கலைக் கல்லூரி அமைத்திட, பெண்களின் முன்னேற்றத்திற்கு என்றென்றும் பாடுபட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் இந்த நல்லரசு மீண்டும் பரிசீலனை செய்ய முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், அரியலூரில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் இரு பாலர் கல்லூரியானது நடைபெற்றுக்

கொண்டிருக்கிறது. அதே மாவட்டத்தில் ஒரு சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் கேட்டுக்கொண்டதன்படி பார்த்தோமென்றால், அரியலூரில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய அரசு இரு பாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கடந்த ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் அனைத்துமே பூர்த்தியாகியிருக்கின்றன. மேலும், அங்கு இருக்கின்ற மாணவிகளுடைய தேவைக்கேற்ப கடந்த கல்வியாண்டிலே கூடுதலாக 20 சதவிகித இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்மூலமாக அங்கே மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது. அதோடுமட்டுமல்லாமல், இன்னும் அதிகப்படியான விண்ணப்பங்கள் இருந்த காரணத்தினால், அரியலூர் மாவட்டத்திற்கு அருகிலுள்ள பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரிலே மகளிருக்கென்று தனியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட கல்லூரியிலே அந்த மாணவிகள் எல்லாம் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பும் உருவாக்கித் தரப்பட்டிருக்கின்றது. மேலும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் அந்தப் பகுதியினுடைய மாணவர்கள் படிப்பதற்கு ஒரே ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மட்டும் இயங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் மேலும் ஒரு கல்லூரியைக் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடந்த 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அரியலூர் மாவட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றைத் தொடங்கி, அந்த ஏழையெளிய மாணவர்கள் படிக்கக்கூடிய வாய்ப்பையும் உருவாக்கித் தந்திருக்கிறது. ஆக, படிக்கக்கூடிய அத்தனை பேருக்குமே பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக இரண்டு கல்லூரிகள், இருபாலர் கல்லூரி ஒன்றும், மகளிருக்கென்று பெண்கள் கல்லூரி ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டு, அதன்மூலமாக அனைவரும் படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கியிருக்கின்ற காரணத்தினால், மேலும் புதியதாக கல்லூரி தொடங்குவதற்குண்டான வாய்ப்புகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.*

2018 ஜூன் 26]

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய மாவட்டமான அரியலூரில் ஏழையெளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவிகள் சிறந்த கல்வியினைப் பெற்றிடும் வகையில், அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்திட மீண்டும் பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லரசை நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் கேட்டுக்கொள்வது என்னவென்று நாம் எடுத்துப் பார்த்தோமே என்றால், இன்றைக்கு அரியலூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய அனைத்து ஏழையெளிய மாணவர்களும் அந்த மாவட்டத்திலேயே உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே பார்க்கின்றபோது அரியலூர் மாவட்டத்திலே நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, தொடங்கப்பட்ட அந்தக் கல்லூரியிலே ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் முழுமையாக அங்கே பூர்த்தி அடைந்திருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகளில்தான் ஒருசில இடங்கள் காலியாக இருக்கின்றன. பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர், அரியலூரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தாலும்கூட, வேப்பூரிலே தோற்றுவிக்கப்பட்ட கல்லூரியிலும் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் முழுமையாகப் பூர்த்தி அடைந்திருக்கின்றன. அதேபோல, வேப்பந்தட்டையில் ஆரம்பிக்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் குறைந்த அளவிலேயே ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக, அப்படிப் பார்க்கின்றபோது அரியலூர், பெரம்பலூர் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் உயர் கல்வி பெறக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை கூடுதலாக இருக்கின்ற காரணத்தினால் வரக்கூடிய காலக்கட்டங்களிலே தொடர்ந்து அம்மா வழியிலே ஆட்சி செய்துகொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின்*

கோரிக்கையை ஏற்று அரியலூர் அல்லாமல் அரியலூர் மாவட்டத்திலே, புதிதாகப் பெண்களுக்கென்று ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்குவதற்கு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி, செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், சென்னைப் புறநகரைப் பொறுத்தமட்டில் 20 இலட்சம் மக்கள் வசிக்கின்ற தாம்பரம், ஆலந்தூர் மற்றும் பல்லாவரம் பகுதிகளிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைக்கப்படாமல் தனியார் கல்லூரிகள்தான் அதிகளவில் இருக்கின்றன. இன்றைய நிலைமையில் சட்டமன்ற உறுப்பினரான என்னை பொதுமக்கள் அணுகி அங்கு பள்ளிகள், தனியார் கல்லூரிகளை அமைக்க வேண்டுமென்று கேட்கின்றபோது மிகவும் கஷ்டமாக உள்ளது. ஆகவே, இந்த மூன்று தொகுதிகளையும் மையப்படுத்தி பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியிலே தமிழறிஞர் மறைமலை அடிகள் வாழ்ந்த பல்லாவரத்தில் அவர் பெயரில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்தை ஒட்டி அமைந்திருக்கின்ற காஞ்சிபுரம் மாவட்டத்திலே புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேவையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்திலே அவர் கேட்கின்ற அந்தப் பகுதிகளைப் பார்க்கின்றபோது ஒட்டுமொத்தமாக உயர் கல்வி பெறக்கூடிய மாணவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு

2018 ஜூன் 26]

அரசுக் கல்லூரிகளும், அரசு உதவிபெறும் கல்லூரிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலேதான், அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 45 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே அவர் குறிப்பிட்ட பகுதியிலே பெரும்பாக்கத்தில் ஒரு கல்லூரியானது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு அவர் கேட்கின்ற அந்தப் பகுதியில் இருக்கின்ற மாணவர்கள் அத்தனை பேருமே உயர் கல்வியைப் பெறக்கூடிய வகையிலே, கல்லூரிகளைத் தோற்றுவித்ததோடு மட்டுமல்லாமல், புதிய பாடப் பிரிவுகளை நாம் எடுத்துக் கொண்டோமென்றால், கடந்த அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2017 வரை பார்க்கின்றபோது 1,321 பாடப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டு மாணவர்கள் முழுமையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கல்வியாண்டில்கூட ஏற்கெனவே விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அறிவித்ததுபோல, 264 புதிய பாடப் பிரிவுகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு புதிய பாடப் பிரிவுகள் மூலமாக மாணவர்களைச் சரியான முறையிலே சேர்த்து, அவர்கள் உயர் கல்வி பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது இந்த அரசு. எதிர்வரக்கூடிய காலக்கட்டங்களிலே அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மாணவர்களின் விண்ணப்பங்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் அரசு கல்லூரி ஆரம்பிப்பது குறித்துப் பரிசீலனை செய்யும் என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

முற்பகல் 10–50

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, மரக்காணம் பகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று சென்ற கூட்டத் தொடரிலேயே அறிவித்திருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அதை அறிவிக்க முடியாது; கேட்கத்தான் முடியும்.*

திருமதி பெ. சீத்தாபதி: *அதற்கு முன்னால் நடைபெற்ற கூட்டத் தொடரிலும் கோரிக்கை வைத்திருந்தேன். சென்ற கூட்டத் தொடரில் நான் உரையாற்றும்போது, பெண்களுக்கு கல்வி எவ்வளவு அவசியம் என்பதைப் பற்றி மிக நீண்ட*

உரையையும் இங்கே ஆற்றியிருக்கிறேன். ஆனால், இதுவரையில், அதற்கான எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியில் வாழக்கூடிய, பின்தங்கிய, மீனவக் கிராமத்தை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள், ஒவ்வொரு வருடமும் பள்ளி மேல்நிலைக் கல்வி இறுதி வகுப்பை முடித்துவிட்டு வெளி வருகின்றனர். அந்த மாணவிகள் உயர் கல்வியைத் தொடர வேண்டுமானால், சென்னை, புதுச்சேரி, விழுப்புரம் போன்ற பகுதிகளுக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால், கால விரயமும், பொருள் விரயமும் ஏற்படுகின்றது. அதன்காரணமாக, நிறைய மகளிர் உயர் கல்வியைத் தொடர முடியாமல் படிப்பை நிறுத்திவிடுகின்றனர். எனவே, அங்கு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துக் கொடுத்தால் அங்குள்ள மாணவிகள் தங்களுடைய உயர் கல்வியைத் தொடர்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால், மரக்காணம் பகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரியை அமைத்துத் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திண்டிவனம் பகுதியில் மகளிருக்கென்று ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கின்றார். கடந்த ஆண்டுகூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டமாகிய விழுப்புரத்தில், அங்குள்ள ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில், மகளிருக்கென்று தனியாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தோற்றுவித்தார்கள். அதைப்போல, அங்குள்ள மாணவிகள் உயர் கல்வி பெறுவதற்காக, சென்னை செல்ல வேண்டுமென்று உறுப்பினர் இங்கே சொன்னார்கள். அது தவறு. அந்தந்த பகுதியிலே இருக்கின்ற மாணவர்கள் அந்தந்த மாவட்டத்திலே உயர் கல்வி பெறுவதற்குத் தேவையான அளவிற்கு, கூடுதல் இடங்களை வழங்கி, படிக்கக்கூடிய வாய்ப்பை அரசானது உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே, இந்த ஆண்டும்கூட பார்த்தோமென்றால், அரசுக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களுக்கு மேல் 20 சதவிகிதம் மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கலாம் என்று இரண்டு நாட்களுக்கு முன்பாக

2018 ஜூன் 26]

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியிலே மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் தொடருகின்ற அரசால் அரசாணை வெளியிடப்பட்டு, அந்த மாணவர்களின் சேர்க்கைக்காக வித்திடப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் உயர் கல்வி பெற வேண்டுமென்று எந்த மாணாக்கர்கள் நினைக்கின்றனரோ, அவர்கள் பயன்பெறக்கூடிய வகையில், அவர்களுக்கு அவர்கள் கேட்கின்ற கல்வி நிறுவனங்கள் மூலமாக, அதாவது அது, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாகட்டும், பலவகை தொழில்நுட்பக் கல்லூரியாகட்டும், பொறியியல் கல்லூரியாகட்டும், அனைத்தும் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 65 புதிய கல்லூரிகளைத் தோற்றுவித்து, அனைவரும் உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். அதே வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலே தொடருகின்ற அரசு, கடந்த ஆண்டு 11 கல்லூரிகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், 360 புதிய பாடப் பிரிவுகளையும் வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டும் 264 புதிய பாடப் பிரிவுகளை வழங்கியிருக்கிறது. ஆகவே, உயர் கல்வி பெறுவதற்கு, எந்தவிதத்திலும், ஏழையெளிய மாணவர்களுக்கு தடை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொண்டு, அவர் சார்ந்திருக்கின்ற மாவட்டத்திலே ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கடந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அந்தப் பகுதி மக்களுக்கு தேவைகள் ஏதேனும் இருந்தால், அதுகுறித்து அரசானது பரிசீலிக்கும் என்பதைச் சொல்லி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

216—

நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***24490—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—